**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 மதுராந்தகம்**

**முன்னிலை : திருமதி. N.வள்ளியம்மா, B.Sc., B.L.,**

**நீதித்துறை நடுவர் எண்.1, மதுராந்தகம்**

**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 01 ஆம் தேதி திங்கட்கிழமை**

**குற்றவியல் பல்வகை மனு எண். 539/2026**

தயாளன், வயது.59, த/பெ.முனுசாமி,
சூனாம்பேடு ரோடு, புதுமாம்பாக்கம்,
மதுராந்தகம் தாலுக்கா,
செங்கல்பட்டு மாவட்டம். ...மனுதாரர்/எதிரி

// எதிரி//

காவல் நிலைய அதிகாரி அவர்கள்,
ஜி1 மதுராந்தகம் காவல் நிலையம்,
Cr. No.233/2026,
U/s. 4(1)(A) TNP Amendment Act-2024. ...எதிர்மனுதார்

*****

இந்த மனுவானது 22.05.2026 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று 01.06.2026 என்முன் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.M.வெங்கடேசன், திரு.N.தசரதன் அவர்கள் ஆஜராகியும் அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை-2 திரு.P.கணேஷ்குமார் அவர்கள் ஆஜராகி இருதரப்பு வாதங்களை கேட்டும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும். இன்று 01.06.2026 இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கிடும்.

**உத்தரவு**

1) மனுதாரர்/எதிரி மதுராந்தகம் காவல் நிலைய Cr. No.233/2026, U/s. 4(1)(A) TNP Amendment Act-2024 வழக்கில் 18.05.2026 ம் தேதி முதல் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அவரை பிணையில் விடுவிக்கக்கோரி BNSS பிரிவு 480 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரை இந்த வழக்கில் தவறாக எதிரியாக சேர்த்து உள்ளார்கள். மனுதாரருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. மனுதாரர் வழக்கு விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிப்பதாகவும் நீதிமன்றம் விதிக்கும் எந்த விதமான நிபந்தனைக்கும் கட்டுப்படுவதாகவும் மனுதாரரை பிணையில் விடவேண்டும் என்று வாதம் செய்யப்பட்டது.

2). மனுவின் பேரில் அரசுத் தரப்பில் அறிவிப்பு கொடுக்கப்பட்டு பெறப்பட்ட பதில் அறிவிப்பில் இந்த எதிரி உரிய அனுமதியின்றி பாண்டிச்சேரி மற்றும் தமிழ்நாடு மதுபாட்டில்கள் கள்ளத்தனமாக வாங்கி வந்து பதுக்கி வைத்து இருந்து மதுராந்தகம் மற்றும் அதன் சுற்றுபுற கிராமங்களில் விற்பனை செய்து வருகிறார். எதிரியை பிணையில் விட்டால் சாட்சிகளை கலைக்க கூடும் என்பதாலும், எனவே எதிரியை ஜாமீனில் விட மிக கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதாக பதில் பெறப்பட்டது.

3) மனுதாரர்/ எதிரி தரப்பில் எதிரி கடந்த 14 நாட்களாக காவலில் இருந்து வருவதாகவும், எதிரி எந்தவிதமான நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதாகவும், எனவே எதிரியை பிணையில் விட உத்தரவிட வேண்டி வாதிடப்பட்டது.

4) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில் எதிரி கடந்த 18.05.2026 ம் தேதியிலிருந்து 14 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருவதையும், எதிரி எந்தவிதமான நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளதையும் கருத்திற்கொண்டும் மேலும், வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகள் மற்றும் வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும் மேற்படி மனுதாரரின் மனுவினை கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

| | **நிபந்தனைகள்** |
|---|---|
| 1 | மனுதாரர்/எதிரி அவரது தரப்பில் இரு நபர்கள் ஜாமீன்தாரர்களாக ரூபாய் 10,000/-க்கு பிணைப்பத்திரம் எழுதிக்கொடுக்கவேண்டும். |
| 2 | மேலும் சாட்சிகளை கலைக்ககூடாது. இவ்வழக்கின் எதிரி புலன்விசாரணை அதிகாரியின் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும். |
| 3 | மனுதாரர்/எதிரி 30 **நாட்களுக்கு தினமும் காலை 10.00 மணிக்கும் மற்றும் மாலை 05.00 மணிக்கும் மதுராந்தகம் காவல் நிலையத்தில் ஆஜராகி கையொப்பம் இடவேண்டும்** என்ற நிபந்தனைகளின் பேரில் மனுதாரருக்கு பிணை வழங்கி இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. |

இந்த உத்தரவு என்னால் கூறப்பட்டு சுருக்கெழுத்து தட்டச்சரால் கணினியில் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 01 ம் நாள் திங்கள்கிழமையன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VALLIAMMA

Judicial Magistrate No.1
Digitally signed by VALLIAMMA
Location: Madurantakam
Date: 2026.06.01 18:01:02 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மதுராந்தகம்.